


26.4.2024

தலைப்புச் செய்திகள்

1. மக்களவை தேர்தலுக்கான 2ஆம் கட்ட வாக்குப்பதிவு அமைதியாகவும் விறுவிறுப்பாகவும் இன்று நடைபெறுகிறது.

2. நாட்டில் அடுத்த மாதம் 20 ஆம் தேதி நடைபெறும் 5-வது கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்கியது.

3. வி.வி.பேட் இயந்திரங்களின் ஒப்புகை சீட்டுகளை 100 சதவிகிதம் சரிபார்க்க கோரி தாக்கலான மனுக்களை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

4. தமிழ்நாட்டில் தடையற்ற மின்சாரம் வழங்குவது தொடர்பாக சென்னையில் இன்று சிறப்பு ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

5. ஷாங்காயில் நடைபெறும் உலக கோப்பை வில்வித்தை கலப்பு இரட்டையர் இறுதி ஆட்டத்திற்கு ஜோதி, அபிஷேக் இணை முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

2-ம் கட்ட தேர்தல்

நாட்டின் 12 மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் 88 மக்களவை தொகுதிகளுக்கான 2ஆவது கட்ட வாக்குப்பதிவு இன்று அமைதியாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெறும்.

இருப்பினும் வடகிழக்கு மாநிலங்கள், நக்சல் தீவிரவாதம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்கூட்டியே வாக்குப்பதிவு நிறைவடையும்.

வாக்குச்சாவடிகளின் முன்பு மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர்.

பெண்கள், இளையோர், முதல் முறை வாக்காளர்கள் ஆர்வமுடன் வாக்களித்து வருகின்றனர்.

மத்திய அமைச்சர் திரு.ராஜீவ் சந்திரசேகர்

காங்கிரஸ் தலைவர் திரு.ராகுல் காந்தி

திரு.சசி தரூர்

பிஜேபி சார்பில் போட்டியிடும் திரைப்பட நடிகை ஹேமமாலினி,

திரு. ஓம்.பிர்லா உட்பட ஆயிரத்து 202 வேட்பாளர்களின் வெற்றியை 15 கோடியே 88 லட்சம் வாக்காளர்கள் நிர்ணயிக்க உள்ளனர்.

இதில் 35 லட்சம் பேர் முதல்முறை வாக்காளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வாக்குப்பதிவிற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு லட்சத்து 67 ஆயிரம் வாக்குச்சாவடிகளில் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட அலுவலர்கள் தேர்தல் பணி ஆற்றிவருகின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பகல் 1 மணி நிலவரப்படி

கேரளத்தில் 39.26 சதவிகிதமும்,

கர்நாடகம் 38.23

அஸ்ஸாமில் 46.31

பீகாரில் 33.8

சட்டிஸ்கட் 53.09

மத்திய பிரதேசம் 38.96

மகராஷ்டிரம் 31.77

மணிப்பூர் 54.26

ராஜஸ்தான் 40.39

திரிபுரா 54.47

உத்திரபிரதேசம் 35.73

மேற்குவங்கம் 47.29

ஜம்மு காஷ்மீர் 42.88 சதவிகித வாக்குகள் பதிவாகின.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

5-ம் கட்டம்

நாட்டில் 6 மாநிலங்கள் 2 யூனியன் பிரதேசங்களின் 49 மக்களவை தொகுதிகளுக்கு அடுத்தமாதம் 20-ம் தேதி நடைபெறும் 5-வது கட்ட தேர்தலுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டதை அடுத்து வேட்பு மனு தாக்கலும் தொடங்கியுள்ளது.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய வரும் 3 ஆம் தேதிவரை கால அவகாசம் உள்ளது.

இத்துடன் ஒடிசா மாநிலத்தில் 2ஆம் கட்ட சட்டப்பேரவை தேர்தலுக்கான அறிவிக்கையும் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

4-ம் கட்ட தேர்தல்

ஆந்திரா தெலங்கானா அஸ்ஸாம் ஜார்கண்ட் உள்ளிட்ட 96 மக்களவை தொகுதிகளுக்கு, அடுத்த மாதம் 13-ம் தேதி நடைபெறும் 4-ம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்பப்பெற வரும் 29-ம் தேதி கடைசிநாளாகும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

3-ம் கட்ட தேர்தல்

இதனிடையே மேற்குவங்கம் உட்பட 94 மக்களவை தொகுதிகளுக்கு வரும் 7 ஆம் தேதி நடைபெறும் 3-ஆவது கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

மேற்கு வங்க மாநிலம் மால்தாவில் தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பாக இல்லை என்றும், மத்திய அரசின் திட்டங்களை ஆளும் கட்சி செயல்படுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

மேதினிபூர் மக்களவை தொகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்குவங்க முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி மேற்கு வங்கத்தில் 25 ஆயிரம் பள்ளி வேலைவாய்ப்புகளை பிஜேபி அரசு ரத்து செய்தது நீதிக்கு புறம்பானது என்றும், தேர்தல் பணியில் அலுவலர்கள் பணியாற்றுவதை தடுக்கவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

நீதிமன்றம்

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் வி.வி.பேட் இயந்திரங்களின் ஒப்புகை சீட்டுகளை 100 சதவிகிதம் சரிபார்க்க கோரிய வழக்கு தொடர்பான அனைத்து மனுக்களையும் உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

இதுதொடர்பான தீர்ப்பை இன்று வழங்கிய நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, திபாங்கர் தத்தா ஆகியோர் கொண்ட அமர்வு தேர்தல் ஆணையத்தின் தொழில்நுட்ப விளக்கங்களின் அடிப்படையில் இந்த தீர்ப்பு வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னங்கள் பொருத்தப்பட்ட பின்னர் அதற்கான கருவியை சீல் வைத்து பாதுகாப்பு பெட்டகங்களில் வைத்து, சம்மந்தப்பட்ட வேட்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகளிடமிருந்து கையொப்பம் பெறவும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளியான பின்னர் குறைந்தது 45 நாட்கள் வரை சீல் வைக்கப்பட்ட பெட்டகங்களும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் பாதுகாப்பாக வைத்திருக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வாக்கு எண்ணும் மையங்கள்

தமிழகத்தில் 39 மக்களவை தொகுதிகளில் வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்கு எண்ணும் மையங்களில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையமான தனியார் பொறியியல் கல்லூரியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரவன் குமார் நேரில் ஆய்வு செய்தார்.

அதேபோல் தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை திருச்சி மத்திய மண்டல காவல் துறை தலைவர் திரு.கார்த்திகேயன் பார்வையிட்டார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மின்சாரம்

தமிழகத்தில் கோடை காலத்தில் தடையற்ற மின்சாரம் வழங்குவது தொடர்பாக சென்னை தலைமை செயலகத்தில் இன்று சிறப்பு ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

கோடை காலத்தில் தினசரி மின் தேவை 19 ஆயிரத்து 654 மெகா வாட்டாக அதிகரித்துள்ள நிலையில் சீரான மின் விநியோகம் தொடர்பாக ஆலோசனைகளை மேற்கொள்ள மின்சார துறை செயலர், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சியோல்

சியோலில் அணு ஆயுத பரவல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் அணு ஆயுதங்கள் பயன்பாட்டை அகற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை இந்தியாவும் தென்கொரியாவும் மேற்கொண்டுள்ளது.

அணு ரசாயனம் மற்றும் உயிரியல் பிரிவுகளில் உள்ள ஆயுதங்களை அகற்றுவது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சக செயலர்கள் நிலையில் விரிவாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

ராணுவம் மற்றும் பாதுகாப்பு பிரிவில் செயற்கை நுண்ணறிவு, பன்முக திறன் கொண்ட ஏற்றுமதி கட்டுப்பாடுகள், விண்வெளி பாதுகாப்பு சார்ந்த அம்சங்கள் குறித்தும் இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

திரவ நைட்ரஜன்

தமிழகத்தில் திரவ நைட்ரஜனை உணவு பொருட்களில் நேரடியாக கலந்து விற்பனை செய்யும் வணிகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் 975 தொடக்க நடுநிலைப்பள்ளிகளில் நவீன ஆய்வகத்திற்கான டீளுடூ இணையதள வசதி இலவசமாக வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் கூறியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் இருசக்கர வாகனங்களை இயக்கும் 18 வயதிற்குட்பட்ட சிறார்களின் பெற்றோர்களுக்கு மூன்றாண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கற்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாமக்கல் மாவட்ட வேளாண் அறிவியல் மையத்தில் கோடைகால ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த பயிற்சி முகாம் வரும் 30ஆம் தேதி நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடப்பு கோடை பருவத்தில் உளுந்து, எள், நிலக்கடலை ஆகிய பயிர்களை சாகுபடி செய்வதற்கான கோடை சாகுபடி சிறப்பு திட்டம் வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

உப்பு

வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால் நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தியும் அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மணிமுத்தாறு

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியில் இன்றுமுதல் சுற்றுலாபயணிகள் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

அரியலூர்

மலேசியாவில் நடைபெறும் சர்வதேச சிலம்பம் விளையாட்டு போட்டியில் அரியலூரை சேர்ந்த 2ஆம் வகுப்பு மாணவி பங்கேற்க உள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

தமிழக உள் மாவட்டங்களில் அடுத்த 5 தினங்களில் அதிகபட்ச வெப்ப நிலை 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக அதிகரிக்க கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதன்படி வட தமிழக உள் மாவட்டங்களில் 42 டிகிரி செல்சியஸ் வரையிலும்,

இதர மாவட்டங்களில் 39 டிகிரி செல்சியஸ் வரையிலும் வெப்பம் அதிகரிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

வட தமிழக உள் மாவட்டங்களின் சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு வெப்ப அலை வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

கோவில்

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான கள்ளழகர் பூ பல்லக்கில் எழுந்தருளும் விழா விமரிசையாக நடைபெற்றது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

வில்வித்தை

ஷாங்காயில் நடைபெறும் உலக கோப்பை வில்வித்தை போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவிற்கு மேலும் ஒரு பதக்கம் உறுதியாகியுள்ளது.

ஜோதி சுரேகா மற்றும் அபிஷேக் வர்மா இணை மெக்சிகோ இணையை 5 புள்ளிகள் வித்தியாசத்தில் தோற்கடித்து இறுதி ஆட்டத்திற்குள் நுழைந்துள்ளது.

நாளை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்திய இணை - எஸ்டோனியா நாட்டு இணையுடன் மோதுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழு

டென்னிஸ்

அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் அர்ஜுன் கதே, ஜுவன் நெடுஞ்செழியன் இணை - ஸ்வீடனின் சைமன், டென்மார்க்கின் ஜோகன்னஸ் இணையை இன்று எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தாவில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் பஞ்சாப் கிங்ஸை எதிர்கொள்கிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு